**ஹொரண நகர சபை - 2023**

-----------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

ஹொரண நகர சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, தேறிய சொத்துக்கள்/ உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களையும் உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்களுடன் கூடிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (அதிகாரம் 255) 181(1) ஆம் உப பிரிவினதும், 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் ஹொரண நகர சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நகர சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நகர சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல்

வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நகர சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நகர சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் குறிப்பிடப்பட்ட தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் நகர சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

### 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை.

| உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை. | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நியமத்தின் பந்தி இலக்கம் 3.27 முதல் 3.32 பந்திக்கு இணங்க மீளாய்வாண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | 2024 இன் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பொதுத் துறை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நிதிக் |

கூற்றுக்கள் தயாரிக்கப்படல் வேண்டும்.

### 1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நூலக புத்தகங்களுக்காக மீளாய்வு ஆண்டிற்குரிய பெறுமானத்தேய்வு ரூபா 1,468,857 ஆக இருந்த போதிலும் ரூபா 150,846 ஆக அதாவது ரூபா 1,318,011 குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரியாக கணக்குகள் வைக்கப்படும். | கணக்குகள் சரியாக தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | 2020 ஆம் ஆண்டின் போது ஏற்பட்டிருந்த முறையே ரூபா 779,061 வருமானம் குறைவாக பதியப்பட்டமை, ரூபா 217,917 ஏனைய விற்பனை வருமானம் அதிகரித்து கணக்கீடு செய்யப்பட்டமை, ரூபா 917,975 பழுதுபார்த்தல். செலவினம் குறைத்து காண்பிக்கப்பட்டமை மற்றும் ரூபா 174,179 ஊழியர் சம்பள மீளளிப்பு வருமானம் அதிகரித்து கணக்கீடு செய்யப்பட்டமை போன்ற தவறுகளை சரி செய்யும் போது வரவு மற்றும் செலவு பதிவுகள் இரண்டும் திரண்ட நிதியத்தில் சீராக்கப்பட்டிருந்தது. | தொங்கல் கணக்கு காணப்படாதிருந்தமையால் திரண்ட நிதியத்தில் சீராக்கி இறுதி விளைவுகள் பெறப்பட்டுள்ளது. | பிழைகளை சரி செய்து சரியாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (இ) | ரூபா 325,704 மற்றும் ரூபா 297,334 மற்றும் திரண்ட நிதியத்தில் செலவு வைத்தல் முறையே பேரேட்டில் திரண்ட நிதியக் கணக்கில் கடன்பட்டோர் கணக்கிலும் செலவிலும் திரண்ட நிதியக் கணக்கில் இரு தடவை செலவிலும் பதியப்பட்டிருந்தது. | 2024 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது சரிசெய்யப்படும். | கணக்குகள் சரியாக தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஈ) | நிதிக் கூற்றுகளின் பிரகாரம் அலுவலக உபகரணங்களின் பெறுமானத்தையும் ஒதுக்கம் ரூபா 719,071 ஆக இருந்த போதிலும் பேரேடு கணக்கில் அது ரூபா 299,668 ஆக காண்பிக்க பட்டிருந்தது. | பேரேட்டு கணக்குகளை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பெறுமானத்தேய்வு சரியாக கணிப்பிடப்பட்டு கணக்கீடு செய்தல் வேண்டும். |

### 1.6.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் டிசம்பர் 31 இல் உள்ளவாறு. சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றில் திரண்ட மற்றும் ஒதுக்கீடுகள் மற்றும் வருமானங்களில் இனங்காணப்படாத மூல மூலதன மானியம் முறையே ரூபா 2,191,984,753 மற்றும் ரூபா 35,682,252 ஆக இருந்த போதிலும் உரிமை, மூலதன மாற்றங்கள் ஆகியவற்றில் அது முறையே ரூபா 2,191,708,353 மற்றும் ரூபா 23,540,983 ஆக அதாவது ரூபா 276,400 மற்றும் ரூபா 12,141,269 குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | 2024 இன் நிதி கூற்றுக்கள் மூலம் சரிசெய்யப்படும். | வேறுபாடுகளுக்கு உரிய காரணங்களை கண்டறிந்து சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் திசம்பர் 31 உள்ளவாறு ஒரு கணக்கு விடயத்தில் நிதிக் கூற்றுகளின் பிரகாரம் மீதிக்கும் அதற்குரிய பட்டியல்களின் பிரகாரமான மீதிக்கும் இடையே ரூபா 2,118,061 வேறுபாடு காணப்பட்டது. | - மேற்படி - | - மேற்படி - |

### 1.7 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை.**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணம் 571 | 03 வருடங்களை விஞ்சி காணப்பட்ட ரூபா 2,287,598 ஆன 08 வைப்பு வகைகள் ஒய்வு பெறச் செய்யப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் தீர்த்து வைக்கப்படும். | தொடர்புடைய நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2018 டிசம்பர் 31 ஆம் திகதி நிதியல்லா | சபைக்குரிய 09 காணிகள் மற்றும் 07 கட்டிடங்கள் | உரித்துறுதிகளை பெற்ற பின்னர் | தொடர்புடைய வழிகாட்டலின் |

| | | | |
|---|---|---|---|
| சொத்துக்கள் மதிப்பீடு செய்யும் வழிகாட்டியின் 2 ஆம் பந்தி | தொழில் தகைமை பெற்ற மதிப்பீட்டாளரை வரவழைத்து மதிப்பீடு செய்து கணக்கீடு செய்வதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மதிப்பீடு செய்யப்படும். | பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் வருமானத்தை விஞ்சிய செலவினம் ரூபா 24,814,535 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் வருமானத்தை விஞ்சிய செலவினம் ரூபா 25,910,915 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கும், முன்னைய ஆண்டிற்கும் உரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2023 | | | | 2022 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மான மூலம் | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப்ப ட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | ஆதன வரியும் வரியும் | 23,440,788 | 21,296,813 | 21,880,547 | 9,457,132 | 22,768,542 | 20,183,756 | 19,505,649 | 9,832,486 |
| (ii) | வாடகை | 15,417,482 | 12,575,201 | 10,775,233 | 6,396,172 | 40,464,200 | 7,615,802 | 14,041,766 | 4,184,462 |
| (iii) | அனுமதி ப்பத்திரக் கட்டணம் | 3,404,500 | 500,000 | 523,000 | (23,000) | 3,290,500 | 481,000 | 2,571,030 | - |
| (iv) | ஏனைய வருமான ம் | - | - | - | - | 15,705,750 | 349,966 | 18,678,418 | 119,278 |
| | மொத்தம் | 42,262,770 | 34,372,014 | 33,178,780 | 15,876,304 | 82,228,992 | 28,630,524 | 54,796,863 | 14,136,226 |

#### 2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரித்தலின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **(அ) ஆதனவரியும் வரியும்** | | |
| மீளாய்வாண்டின் டிசம்பர் 31 இல் உள்ளவாறு ஆதன வரி காலப்பகுப்பாய்வின் பிரகாரம் 01 இற்கும் 03 வருடங்களுக்கும் இடையிலான ஆதன வரி நிலுவை ரூபா 2,623,442 தொகையும், 03 விற்கும் 05 வருடங்களுக்கும் இடையிலான ஆதன வரி நிலுவை ரூபா 2,380,388 தொகையும், 05 இற்கும் 10 வருடங்களுக்கும் இடையிலான நிலுவை ரூபா 1,132,760 தொகையும் ஆக இருந்ததுடன் 10 வருடங்களுக்கு மேற்பட்ட நிலுவை ரூபா 489,161 ஆகும். | வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிலுவை வருமானத்தை விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| **(ஆ) வாடகை** | | |
| (i) மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் விருந்தினர் விடுதி வாடகை நிலுவை ரூபா 2,867,646 ஆக இருந்ததுடன் ஆண்டின் போது அதில் ரூபா 2,435,396 அதாவது 84 சதவீதம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பாக உள்ளூராட்சி ஆணையாளர் ஊடாக உள்ளூராட்சி அமைச்சுக்கு அறிவிக்கப் பட்டுள்ளதுடன் அதன் பிரகாரம் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | - மேற்படி - |
| (ii) விருந்தினர் விடுதி வாடகை வருடாந்த சிட்டையிடல் ரூபா 955,882 ஆக இருந்த போதிலும் ஆண்டின் போது அதில் எந்தவொரு தொகையும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| **(இ) ஏனைய வருமானம்** | | |
| மாகாண சபையின் பிரதம செயலாளரிடம் இருந்தும், ஏனைய அதிகாரத் தரப்பினரிடம் இருந்தும் 2023 திசம்பர் 31 இல் கிடைக்க வேண்டிய முத்திரைக் கட்டணம் ரூபா 53,663,774 ஆகும். | 2024.05.31 ஆம் திகதி வரையில் ரூபா 38,821,036 கிடைக்கப் பெற்றுள்ளதுடன் மிகுதி எதிர்காலத்தில் அறவிடபடும். | - மேற்படி - |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தினால் கையளிக்கப்பட்ட பணிகளை நிறைவேற்றுதல்

நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 4 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| நகரசபை கட்டளைச் சட்டத்தின் 118 ஆம் பிரிவின் பிரகாரம் சபை அதிகார பிரதேசத்தில். சேகரிக்கப்படுகின்ற மலக்கழிவுகள் உரிய பிரகாரம் அகற்றுவதற்காக சபையினால் கழிவு பவுசர் சேவை நடாத்தி செல்லப்பட்டிருக்கவில்லை. | 2017 ஆம் ஆண்டு முதல் கலி பவுசர் வழங்குமாறு கோரப்பட்ட போதும் இதுவரை சபைக்கு பவுசர் கிடைத்திருக்கவில்லை. | தொடர்புடைய பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.2 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் இறுதி வரையில் சபையின் பணிகள் கணணி வலையமைப்பை ஏற்படுத்துவதற்காக நெக்பா நிறுவனத்திற்கு ரூபா 4,484,470 செலுத்தப்பட்டிருந்த போதிலும் தொகுதிக்குரிய பணிகள் உரிய பிரகாரம் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | ஒட்டுமொத்தமாக கவனத்தில் கொள்ளும் போது தொகுதி அமுல்படுத்தும் நிலையில் காணப்படுகின்றது. | கொள்வனவு செய்யப்பட்ட சகல தொகுதிகளும் முறையாக அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.3 இனங்காணப்பட்ட நட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் 104 இன் பிரகாரம் இலக்கம் PB-6383 என்ற வாகனத்தின் எஞ்சினுக்கு பாதிப்பு ஏற்பட்டமை தொடர்பாக மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இதற்கு உரியதாக நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கை 2024.05.29 ஆம் திகதி கலந்துரையாடப்பட்டுள்ளதுடன், இறுதி அறிக்கை கிடைத்த கிடைத்த பின்னர் மிகுதி நடவடிக்கை எடுக்கப்படும். | தொடர்புடைய நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.4 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலக்கம் 719675 என்ற நடைமுறை கணக்கில் 03 வருடங்கள் அளவிலான காலம் முதல் காணப்பட்ட ரூபா 99,995 மீதி மீளாய்வாண்டின் போதும் தீர்த்து வைக்கப்பட்டிருக்க வில்லை. | எதிர்காலத்தில் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நீண்ட காலமாக காணப்படுகின்ற வங்கி மீதி தீர்த்து வைக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | 03 இற்கும் 05 வருடங்களுக்கும் இடையிலான காலத்தில் இருந்து காணப்படுகின்ற கடன்கொடுத்தோர் மீதி மற்றும் கடன்பட்டோர் மீதி முறையே ரூபா 2,832,498 மற்றும் ரூபா 3,444,586 தொகைகள் மீளாய்வாண்டின் போதும் தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை. | இதற்குரிய குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் தீர்த்து வைக்கப்படும். | நீண்டகாலமாக செலுத்தவேண்டிய மற்றும் பெறவேண்டிய செய்திகள் தீர்த்துவைக்கப்படல் வேண்டும். |

## 3.5 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 1980 செப்டம்பர் 09 திகதிய இலக்கம் 105/3 என்ற வர்த்தமானி அறிவித்தலின் மூலம் ஹொரண விருந்தினர் விடுதி நிர்வாகம் நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு கையளிக்கப்பட்ட போதிலும், மாதாந்த கட்டணம் அறவிடல் தொடர்பாக முறையான உடன்படிக்கையில் கைச்சாத்திட்டமையினால், 2021 ஆம் ஆண்டிலிருந்து நிலுவை விருந்தினர் விடுதி வாடகை அறவிடுவதற்காக சட்டரீதியான நடவடிக்கை எடுப்பதற்கு சபைக்கு முடியாதிருந்தது. | இது தொடர்பாக உள்ளூராட்சி ஆணையாளர் ஊடாக உள்ளூராட்சி அமைச்சுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன் அதன் பிரகாரம் மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்படும். | முறையான உடன்படிக்கையில் கைச்சாத்திட்ட பின்னர் கட்டணம் அறவிடப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | நிலுவைக் கடை வாடகை 05 மாதங்கள் முதல் 04 வருடங்கள் வரை காணப்பட்ட போதும் உடன்படிக்கையின் பிரகாரம் நிலுவைக் கடை வாடகை செலுத்தாதவர்களுக்கு எதிராக சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | செலுத்தாதவர்களுக்காக கையளித்தல் அறிவித்தல் விநியோகிக்கபட்டுள்ளது. | உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 2019 ஆண்டு முதல் மீளாய்வாண்டின் டிசம்பர் வரை உடன்படிக்கை காலம் முடிவடைந்த 29 கடைகளில் இருந்து கிடைக்க வேண்டிய கடை வாடகை ரூபா 793,000 ஆக இருந்ததுடன், அந்த கடைகளுக்காக புதிய உடன்படிக்கை கைச்சாத்திடுவதற்கோ அல்லது உடன்படிக்கையை புதுப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 2024.05.31 திகதியில் நிலுவையில் ரூபா 620,250 தமது அறவிட பட்டுள்ளதுடன் உடன்படிக்கையை புதுப்பிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | - மேற்படி - |

### 3.6 விளைவற்ற அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 ஆம் ஆண்டு முதல் விளைவற்று காணப்படுகின்ற தீயணைப்பு வண்டி மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் பழுதுபார்க்கப்பட்டிருக்க வில்லை. | வண்டியை பதிவு செய்தல் தொடர்பாக தகவல்கள் காணப்படாதிருந்ததுடன் பழுதுபார்ப்பதற்கு அனுப்பப்பட்டுள்ளது. | பதிவு தொடர்பான தகவல்களை சேகரித்து வாகனத்தை ஓட்டத்தில் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | டெக்டர் கலி பவுசர் மற்றும் கலி வண்டி மற்றும் கம்பெக்டர் வண்டி 2015 ஆண்டு முதல் விளைவற்று காணப்பட்டது. | எதிர்காலத்தில் பழுதுபார்ப்பதற்கு அனுப்பப்படும். | பழுதுபார்த்து ஓட்டத்தில் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.7 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபைக்குச் சொந்தமான டொலரின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் மதிப்பீடு செய்து கணக்கீடு செய்யப்படும். | சொத்துக்களை மதிப்பீடு செய்து கணக்கீடு செய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | நிலையான சொத்துப் பதிவேடு பராமரித்து பேணச்செல்ல வேண்டி இருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அந்த பதிவேடு நாளதுவரையாக்கபடாமல் இருந்ததுடன் கணணி தொடர்பான நிலையான சொத்து பதிவேடு ஒன்றும் பேணிச்செல்லப்பட்டிருக்க வில்லை. | எதிர்காலத்தில் முறையான நிலையான சொத்து பதிவேடு ஒன்று பேணிச்செல்லப்படும். | நிலையான சொத்து பதிவேடு முறையாக பேணிச்செல்லப்படல் வேண்டும். |
| (இ) | சபையின் காணிப் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்ட 41 காணிகளில் உரித்து சபைக்கு கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கவில்லை. | 28 காணி கூறுகள் கிடைத்த முறை தொடர்பான விபரங்கள் காணப்படாதிருந்ததுடன் மிகுதி காணிகள் சபைக்கு கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சபைக்கு கையளிக்கப்பட வேண்டிய காணிகளை கையேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |